**செய்தி வெளியீடு எண்: 11/02/2021** **நாள்: 23.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் ரோட்டரி கிளப் சங்கத்தின் உதவியுடன் ஜியோ இந்தியா பவுண்டேசன் என்ற அரசு சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனம், சென்னையிலுள்ள 39 மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ இரயில் நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் பெண் பயணிகளுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் சேவையை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (23.02.2021) கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய வளாகத்தில் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., முன்னிலை வகித்தார்.

ஏற்கனவே சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் பெண்களுக்கென தனி இரயில் பெட்டி மற்றும் முதல் வகுப்பு பெட்டிகளும் பெண்கள் மட்டுமே பயணம் செய்யும் பிரத்யேக பெட்டிகளாக மாற்றப்பட்டது, இரயில் நிலையங்களில் பாதுகாப்பு மற்றும் தனிக்கழிப்பறை இருப்பதோடு, பயணங்களில் கொரோனா பெருந்தொற்று பரவாவண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் தேவையான அளவிற்கு கண்காணிப்பு கேமராக்கள், அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் சேவை மையங்கள் உள்ளன. இதனுடன் கூடுதலாக மெட்ரோ இரயிலில் பயணம் செய்யும் பெண் பயணிகளுக்கு அவர்களுடைய அவசர காலத்தில் இந்த சானிட்டரி நாப்கின்கள் பெரிதும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) திரு. ராஜேஷ் சதுர்வேதி, ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3232-இன் மாவட்ட முதல் பெண்மணி திருமதி. கமலா முத்துபாலியப்பன், திருவான்மியூர் ரோட்டரி கிளப் தலைவர் திருமதி. சாரதா ரமணி, ஜியோ இந்தியா பவுண்டேசன் நிறுவனர் திருமதி. பிரியா ஜெமிமா, பவுண்டர் டிரீம் முதல் தலைமுறை தொழில்முனைவோர் அமைப்பின் திருமதி. தாராகேஸ்வரி ஜெயன் மற்றும் சென்னை மெட்ரோ இரயிலின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**